மாலை முரசு

பக்கங்கள் 16+2

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 29 சனிக்கிழமை 13.09.2025 | அதிர்வு 45

## அரச வாகனத்தை மீள ஒப்படைத்த பிரேமதாஸவின் மனைவி ஹேமா



மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவின் மனைவி ஹேமா பிரேமதாஸ, அரசால் தனக்கு 05▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# ராஜபக்ஷ குடும்பத்தினர் பெரும் குற்றவாளிகள்!

## சட்டத்தின் பிடியில் இருந்து அவர்கள் தப்பவே முடியாது என்கின்றது அரசு

“மஹிந்த, கோட்டாபய, பஸில், சமல், நாமல் என ராஜ பக்ஷ குடும்பத்தினர் பெரும் குற்றவாளிகள். அவர்கள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பவே முடியாது. உரிய தண் டனைகளை அவர்கள் அனுப வித்தே தீருவார்கள்.” 06▶



# வடக்கு முன்னேற மஹிந்தவே காரணம்

## இப்படி மார்தட்டுகின்றது மொட்டுக் கட்சி

“மஹிந்த ராஜபக்ஷவால்தான் வடக்கு மாகாணம் எல்லா வழிகளிலும் முன்னேறியது. பிரிவினைவாத சிந்தனையுடைய ஒரு சிலரே மஹிந்தவின் வெளியேற்றத்தைக் கொண்டாடுகின்றனர்.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஊடகப் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சஞ்சீவ எதிரிமான்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

‘மஹிந்த ராஜபக்ஷ விஜேராம அரச மாளிகையில் இருந்து வெளியேறியது தொடர்பில் மகிழ்ச்சியை வெளிப் 05▶






# படுகொலை செய்யப்பட்ட ஊடகர் நிமலராஜனின் விசாரணை அறிக்கை யாழ். நகரில் விநியோகம்

(எஸ்.நிதர்ஷன்)

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனுக்கு நீதி கோரிய விசாரணை அறிக்கை யாழ். ஊடக அமைய ஊடகவியலாளர்களால் யாழ்ப்பாணம் நகரில் விநியோகிக்கப்பட்டது.

யாழ் . ஊடக அமையத்தின் தலைவர் கு.செல்வக்குமார் தலைமையில் சக ஊடகவியலாளர்களால் இன்று சனிக்கிழமை காலை, யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம், அதனைச் சூழவுள்ள பகுதிகளில் விசாரணை அறிக்கை விநியோகிக்கப்பட்டது



கடந்த 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளை, ஊடகவியலாளர் நிமலராஜன் வீட்டினுள் புகுந்த துப்பாக்கிதாரிகள் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதுடன், வீட்டினுள் கைக்குண்டு வீசியும் தாக்குதல் மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்ட நிலையில், அவரது தந்தை தாய் மற்றும் மருமகன் ஆகியோர் காயங்களுக்குள்ளாகி இருந்தனர்.

நிமலராஜன் படுகொலைக்குக் கடந்த 25 ஆண்டுகளாக நீதி இன்றி நிலைத்து வரும் நிலையில், படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்காகத் தொடர்ந்தும் யாழ். ஊடக அமையம் குரல் கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.













# மீனவர்களின் வாடிக்குத் தீ வைப்பு!

## வடமராட்சியில் மணல் கடத்தல் கும்பல் அட்டகாசம்

## இரு மீனவர்கள் காயங்களுடன் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், வடமராட்சி பகுதியில் சட்டவிரோத மணல் கடத்தல் கும்பல்களால் மீனவர்களின் வாடிகள் அடித்து உடைத்து சேதமாக்கப்பட்டு , தீ வைக்கப்பட்டுள்ளதுடன், மீனவர்கள் மீது தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த இரு மீனவர்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சி, கற்கோவளம் சந்தைக்கு அண்மித்த பகுதியில் தொடர்ச்சியாக சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது.

இவ்வாறு மணல் அகழப்படும் இடங்களில் ஏற்படும் பாரிய குழிகளில் மழை நீர் தேங்குவதன் ஊடாக பல்வேறு அசௌகரியங்களுக்கு அப்பகுதி மக்கள் முகம் கொடுத்து வந்த நிலையில் கடந்த மாரி காலத்தில் இவ்வாறு சட்டவிரோதமாகத் தோண்டப்பட்ட குழியில் தேங்கியிருந்த வெள்ள நீரில் வீழ்ந்து ஒருவர் உயிரிழந்திருந்தார்.

அத்துடன் இவ்வாறான சட்டவிரோத மணில் அகழ்வு தொடர்ந்து இடம்பெறுமாக இருந்தால் இந்தப் பகுதி வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் காணப்படுகின்றது.

எனவே, கற்ககோவளம் – புனிதநகர் உள்ளிட்ட பல பகுதிகளில் உள்ள மக்கள் பாதிக்கப்படும் நிலை ஏற்படும். இவ்வாறான பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தும் சட்டவிரோத மணல் கடத்தலில் இந்தப் பகுதியை சேர்ந்த குறிப்பிட்ட சிலரே ஈடுபட்டு வருகின்றனர் என்று அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

இந்நிலையில் அந்த நபர்களின் வீடுகளுக்கு நேரில் சென்று இனிமேல் இவ்வாறான சட்டவிரோத மணல் கடத்தல் செயற்பாட்டில் ஈடுபட வேண்டாம் என அந்தப் பகுதியைச் சேர்ந்த சிலர் கோரியுள்ளனர்

அதனை அடுத்து, அவ்வாறு கோரிக்கை விடுத்தவர்களை வரும் வழியிலேயே வழிமறித்து அச்சுறுத்தப்பட்ட நிலையில், இரவு மீன்பிடி வாடிகள் அடித்துடைக்கப்பட்டு தீவைத்து எரிக்கப்பட்டுள்ளன.

சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்டு வருபவர்கள் வாள்களுடன் வந்து மேற்கொண்ட இந்தத் தாக்குதலில் இரு மீனவர்கள் காயமடைந்துள்ளனர்.

சம்பவ இடத்துக்கு பருத்தித்துறை பிரதேச செயலாளர் ந.திரிலிங்கநாதன் சென்று பார்வையிட்டு பருத்தித்துறை பொலிஸாருக்குத் தகவல் வழங்கிய தையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் குற்றம் இடம்பெற்ற இடத்துக்குப் பொலிஸ் பாதுகாப்பும் வழங்கியுள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும், அந்தப் பகுதியில் உள்ள கண்காணிப்பு கமரா பதிவுகளின் அடிப்படையில் ஏனையவர்களையும் கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.



# வவுனியா மாநகர துணை மேயரை பதவி விலகக் கோரி அழுத்தமா?

(கி.வசந்தன்)

வவுனியா மாநகர சபையின் துணை மேயரைப் பதவி விலககே கோரி அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா மாநகர சபையால் நடைபாதை வியாபாரம் முற்றிலும் தடை செய்யப்பட்டு அவர்களுக்கான மாற்றிடங்கள் ஒதுக்கப்பட்டு வரும் நிலையில் வவுனியா மொத்த மரக்கறி வியாபார நிலையங்களும் பொருளாதார வர்த்தக மையத்துக்குள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.



இந்நிலையில், வவுனியா – ஹொரவப்பொத்தான வீதியில் உள்ள இஸ்லாமிய சமூகம் சார்ந்தவர்களின் சிறு வியாபார நிலையங்களும் நடைபாதையில் இருப்பதால் அவற்றையும் அகற்றுவதற்கு வவுனியா மாநகர சபையின் துணை மேயர் பரமேஸ்வரன் கார்த்தீபன் கடும் முயற்சி எடுத்து வரும் நிலையிலேயே அவரை இராஜினாமா செய்யுமாறு ஒரு சில அரசியல்வாதிகளால் அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகின்றது என அறியப்படுகின்றது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## செம்மணி யதார்த்தம்

தோண்டத் தோண்ட மனித என்புக்கூடுகள் செம்மணி மனித புதைகுழியில் இருந்து வெளிப்பட்டுக் கொண் டிருக்கின்றன. இப்போது நிலையில் இதுவரை 240 பேரின் எலும்பு கூடுகள் வெளிவந்துள்ளன.

வடக்கு, கிழக்கில் பல்லாயிரக் கணக்கானோர் வலிந்து காணாமலாக்கப்பட்ட நிலையில் அது பற்றிய நீதியான - நேர்மையான - சர்வதேச நியமங்களுக்கு அமைவான - விசாரணைகளை தென்னிலங்கை அரசு முன்னெடுக்கவில்லை. காலத்தை இழுத்தடித்து, உண்மைகளை மூடி மறைத்து, பொறுப்புக் கூறலை நிலை நாட்டாமல் தவிர்த்து, தண்டனை விலக்களிப்பை நிலைப்படுத்தி, நீதியை நீர்த்துப் போக வைக்கும் வேலையைத் தான் தொடர்ந்து வந்த பௌத்த - சிங்களப் பேரினவாக அரசுகள் மேற்கொண்டபடி இருக்கின்றன.

இதற்கு முன்னரும் இவ்வாறு வடக்கு, கிழக்கில் அகழப்பட்ட பல மனிதப் புதைகுழிகளில் இருந்து பல நூற்றுக் கணக்கானோரின் என்புக் கூடுகள் மீட்கப்பட்ட போதிலும், அவை தொடர்பில் நீதி, நியாயமான, திருப்தி தரக்கூடிய எந்தப் புலனாய்வு விசாரணைகளும் தொடரவில்லை. அல்லது அவற்றைத் தொடர்ந்து மேற்கொண்டு, உண்மைகளைக் கண்டுபிடிக்கும் தலைமைத்துவ வழிகாட்டலை அரசு தலைமைகள் மேற்கொள்ளவில்லை. உண்மைகள் வெளியே வராமல் தடுப்பதற்கான தந்திரோபாய நகர்வுகளே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இப்போதும் கூட செம்மணி புதை குழி விடயத்தில், அங்கு தோண் டத் தோண்ட வெளிப்படும் மனித எலும்புக்கூடுகளை அகழ்ந்து எடுப்பதற்கு நீதிமன்றம் எடுக்கும் நடவடிக்கையை இவ்விடயத்தில் தான் சுயாதீனமாக - நேர்மையாக - நீதியாக - நடக்கின்ற ஒரு விவகாரமாக வெளியே காட்டுவதற்கு மட்டுமே தேசிய மக்கள் சக்தி அரசும் முயலுகின்றது. அதற்கப்பால் இந்த மனிதப் புதைகுழி அகழ்வு தொடர்பில், மீட்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளை அடையாளம் கண்டு, அந்த கொடூரங்களுக்குக் காரணமான குற்றங்களை இழைத்தோரை அம்பலப்படுத்தி, நீதி யின் முன் நிறுத்தி, சட்டத்தை நிலை நாட்டி, பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்தும் எண்ணம் இந்த அரசுக்கு கிஞ்சித்தும் இல்லை என்பது வெளிப்படையானது.

ஆயினும் இப்போது ஜெனிவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அமர்வு அதற்கு இடமளிக்காமல் அழுத் தம் கொடுக்கப்போகின்றது என்று தெரிகிறது.

அங்கு இலங்கை தொடர்பாக இம்முறை நிறைவேற்றப்படுவதற்கு தயாராக உள்ள வரைவுப் பிரேரணை குறித்து முறை சாரா விவாதம் ஒன்று நாளை மறுதினம் 15 ஆம் திகதி நடைபெற இருக்கின்றது.

இப்போதுள்ள வரைவுத் தீர்மானத்தில் -

சர்வதேச தரநிலைகளுக்கு இணங்க, பாரிய புதைகுழிகளை தோண்டி எடுப்பதற்கு போதுமான நிதி, மனித மற்றும் தொழில்நுட்ப வளங்களைப் பெறுவதற்கு, இலங்கை அரசாங்கம் முன்கூட்டியே சர்வதேச ஆதரவைப் பெற வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.

அந்தப் பிரேரணையை இலங்கை நிராகரிப்பதாக முற்கூட்டியே அறிவித்திருந்தாலும், அது கவுன்ஸிலில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்ட பின்னர், மனிதப் புதைகுழிஅகழ்வு விடயத்தில் சர்வதேச நிபுணத்துவ உதவியை - வளப் பங்களிப்பை - ஈடுபாட்டை - இலங்கை அனுமதித்தேயாக வேண்டியிருக்கும்.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தும் விதத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள சிலரின் சமூக வலைத்தளப் பதிவுகள் அமைந்திருந்தன. இது பற்றி உங்களின் கருத்து என்ன?' என்று சஞ்சீவ எதிரிமான்னவிடம் வினவப்பட்டது.

இதற்குப் பதிலளித்த சஞ்சீவ எதிரிமான்ன,

"வடக்கில் உள்ள ஒட்டுமொத்த தமிழ் மக்களின் நிலைப்பாடு அல்ல இது. போரை முடிவுக்குக் கொண்டு வந்தமை தொடர்பில் சிலர் மாறுபட்ட கருத்துடன் இருக்கலாம். ஆனால், வடக்கு மக்களால் கோரப்பட்ட அமைதியான அரசியல் சூழ்நிலையை மஹிந்த ராஜபக்ஷவே ஏற்படுத்திக்கொடுத்தார். இதனை வடக்கு மறக்கவில்லை.

அத்துடன், வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் கூட இருந்திருக்கலாம். ஆனால், தோல்வி எனத் தெரிந்தும் தேர்தல் நடத்தப்பட்டது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து தமது உயிரைப் பாதுகாத்துக்கொள்வதற்காக அரசு பக்கம் வந்த 3 இலட்சம் பேர் பாதுகாக்கப்பட்டனர். அவர்களுக்குத் தேவையான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

வடக்கில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டன, காணிகள் விடுவிக்கப்பட்டன. வீடுகள் அமைக்கப்பட்டு மீள்குடியேற்றமும் செய்யப்பட்டது. சரணடைந்த 11 ஆயிரத்து 900 முன்னாள் போராளிகளுக்குப் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்டன.

மஹிந்த அரசால்தான் வடக்கு முன்னேற்றம் கண்டது. இது வடக்கில் பெரும்பான்மையான மக்களுக்குத் தெரியும். எனினும், பிரிவினைவாத சிந்தனையில் உள்ள சிலர் இருக்கலாம். அவர்களைத் திருப்திப்படுத்தும் விதத்திலேயே இந்த அரசு செயற்படுகின்றது."

– என்றார்.

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடுக்கப்பட்ட வாகனத்தை மீண்டும் அரசிடம் ஒப்படைத்துள்ளார் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை இரத்துச் செய்வதற்காக அரசால் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலம் கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதனால், அரசால் கொடுக்கப்பட்ட வாகனத்தை மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸவின் மனைவி ஹேமா பிரேமதாஸ மீண்டும் அரசிடமே ஒப்படைத்துள்ளார் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.





## ராஜபக்ஷ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள அரச இல்லத்தில் இருந்து வெளியேற மாட்டேன் என்று அடம் பிடித்த மஹிந்த ராஜபக்ஷவை நாட்டின் சட்டம் இன்று அங்கிருந்து வெளியேற்றியுள்ளது. இப்போது அவர் தங்காலையில் இருந்து கொண்டு அரசியல் இலாபம் தேடும் வகை யில் அழுது புலம்பியவாறு அறிக்கை விடுகின்றார்.

குடும்ப ஆட்சி நடத்தி இந்த நாட்டை அழித்த ராஜபக்ஷ குடும்பத்தினரை வரலாறு ஒருபோதும் மன்னிக்காது. பெரும் குற்றவாளிகளான அவர்கள், சட்டத்தின் பிடியில் இருந்து தப்பவே முடியாது. உரிய தண்டனைகளை



அவர்கள் அனுபவித்தே தீருவார்கள்.” - என்றார்.

# அடையாளம் தெரியாத ஆணின் சடலம் மீட்பு!



ஆற்றில் இருந்து அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கிராண்ட்பாஸ் – மோலவத்த பிரதேசத்தில் உள்ள ஆற்றில் இருந்து நேற்று வெள்ளிக்கிழமை மாலை இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று கிராண்ட்பாஸ் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

55 முதல் 60 வயது மதிக்கத்தக்க 5 அடி 4 அங்குலம் உயரமுடையவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமானது கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது கொலையா அல்லது விபத்தா என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 40 போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் சிக்கினார்!

யாழ்ப்பாணத்தில் 40 போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய் யப்பட்டுள்ளார்.

கொழும்புத்துறை பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞரே கைது செய் யப்பட்டுள்ளார்.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே மேற்படி இளைஞர் கைது செய் யப்பட்டுள்ளார்.

அந்த இளைஞரிடம் இருந்து 40 போதை மாத்திரைகளைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.



# சபாநாயகருக்கு எதிராகப் பிரேரணை; கட்சித் தலைவர்கள் விரைவில் முடிவு!

## எதிரணி எம்.பி. முஜிபூர் ரஹ்மான் தெரிவிப்பு

"சபாநாயகர் மீதான நம்பிக்கை குறைவடைந்து வருகின்றது. எனவே, அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவது தொடர்பில் கட்சித் தலைவர்கள் விரைவில் முடிவெடுப்பார்கள்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ் மான் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணை நிறை வடையும் வரை பதவி விலகுமாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சரிடம் வலியு றுத்தினோம்.

இந்தச் சம்பவம் நடக்கும்போது அவரே கிழக்கு மாகாணக் கட்டளைத் தளபதியாக இருந்தார். எனினும், அவர் பதவி விலகவில்லை. அரசும் அவரைப்



பதவி நீக்கவில்லை. அதனால்தான் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண் டுவரப்பட்டது.

இந்தப் பிரேரணையையைச் சபாநா யகர் நிராகரித்துள்ளார். சட்டமா அதிபரால் வழங்கப்பட்ட சட்ட ஆலோசனையை சபையில் முன்வைக்குமாறு நாம் சபா நாயகரிடம் வலியுறுத்தினோம்.

குறித்த நம்பிக்கையில்லாப் பிரேர ணையை ஏற்க முடியும் எனச் சட்டமா அதிபர் கூறினார் என எமக்குத் தகவல் கிடைத்தது. அதனை உறுதிப்படுத்திக் கொள்ளவே ஆவணத்தைக் கோரினோம். எனினும், அது வழங்கப்படவில்லை.

பிரதி அமைச்சருக்கு எதிராக நம்பிக் கையில்லாப் பிரேரணையை கொண்டுவர முடியும். எனினும், சபாநாயகர் அரசி யல் முடிவொன்றை எடுத்து அதனை நிராகரித்துள்ளார். இது அரசைப் பாதுகாக்கும் செயலாகும். இந்த விடயத்தில் சபாநாயகர் ஒருதலைப்பட்சமாகச் செயற் பட்டுள்ளார்.

அரசுக்கு மூன்றிலிரண்டு பெரும் பான்மைப் பலம் உள்ளது. அப்படி இருந்தும் எதற்காக விவாதத்தக்கு அஞ்ச வேண்டும்? இந்தப் பிரேரணையை விவாதத்துக்கு எடுத்தால் ஆளுங்கட்சியில் உள்ள சிலருக்குக் கடந்த அரசுகளுடன் இருந்த தொடர்பு அம்பலமாகும். இத னால்தான் ஆளுங்கட்சி அஞ்சுகின்றது." – என்றார்.

# காசாவில் இனப்படுகொலையில் ஈடுபடும் தரப்புடன் எங்களுக்கு நட்புறவு கிடையாது!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் திட்டவட்டம்

"காசாவில் அரங்கேறும் இனப்படு கொலையை வன்மையாகக் கண்டிக் கின்றோம். வைத்தியசாலைகள், பாடசாலைகள் மீது குண்டுகளைப் போட்டு, படுகொலையில் ஈடுபடும் அரச பயங்கரவாத கலாசாரம் முடிவுக்கு வரும் வரை, அந்த தரப்புடன் எமக்கு நட் புறவு கிடையாது. சங்கமும் கிடையாது. சங்கமும் அமையாது."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இஸ்ரேல் – இலங்கை நட்புறவு சங்கத் தைக் கட்டியெழுப்புவதற்குரிய அழைப்பை ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்ஹ விடுத்தி ருந்தார். இது பெரும் சர்ச்சைக்குரிய விடயமாக மாறியது. பின்னர் அவர் மன்னிப்புக் கோரி, அதற்குரிய முயற்சியை கைவிட்டார்.

இந்நிலையிலேயே சஜித் மேற்கண்ட வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,



"பாலஸ்தீன மக்களின் விடுதலைக்காக நாம் முன்னிற்கின்றோம். இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் என்பன சமரசத்து டன் செயற்பட வேண்டும் என்பது எமது கொள்கை.

பாலஸ்தீனமானது இன்று இஸ்ரேல் அரச பயங்கரவாதத்தை எதிர்கொண்டு வருகின்றது.

காசாவில் இன்று இனப்படுகொலை நடக்கின்றது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

வைத்தியசாலைகளுக்குக் குண்டு களைப் போட்டு, படுகொலையில் ஈடுபடும் அரச பயங்கரவாத கலாசாரம் முடிவுக்கு வரும் வரை, அந்தத் தரப்புடன் எமக்கு நட்புறவு கிடையாது.

சங்கமும் கிடையாது. இது விடயத்தில் நாம் தெளிவாக இருக்கின்றோம். இதுதான் எமது கொள்கை – நிலைப்பாடு. எந்த அழுத்தங்களுக்கும் அடிபணியமாட்டோம். அழுத்தங்களால் எமது நிலைப்பாடு மாறப்போவதும் இல்லை." – என்றார்.



# சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வு

வேலணைப் பிரதேச செயலக பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலகால் வேலணை சரஸ்வதி வித்தியாலயம் மற்றும் ஜே-33 கிராம சேவையாளர் பிரிவில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு நேற்று முன்தினம் நடத்தப்பட்டது.

பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் வளவாளராக கலந்து கொண்டார்.

நிகழ்வில் கிராம சேவையாளர், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் பங்குபற்றினர்.







# சர்வதேச நேர்மறை சிந்தனை தினம் இன்று!

“எண்ணம் போல் வாழ்க்கை” என்ற நம்முடைய முன்னோர்களின் முதுமொழி நேர்மறை சிந்தனையின் ஆழமான தத்துவத்தை விளக்குகிறது. இன்று உலகம் முழுவதும் வேகமாக மாறி வரும் நிலையில் மன அழுத்தம், கவலை, மற்றும் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் நேர்மறை சிந்தனை ஒரு சக்தி வாய்ந்த கருவியாக உருவெடுத்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் செப்ரெம்பர் 13 ஆம் திகதி உலகம் முழுவதும் சர்வதேச நேர்மறை சிந்தனை நாள் கொண்டாடப்படுகிறது. நேர்மறை சிந்தனை என்பது வெறுமனே மகிழ்ச்சியாக இருப்பது மட்டுமல்ல.

மானிட வாழ்க்கையானது நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றது. இன்ப துன்பங்கள் இரண்டும் உண்டு. இது வாழ்க்கையின் இருண்ட பக்கங்களையும் அறிந்து அவற்றை எதிர்கொள்ளும் மன தைரியத்தை உருவாக்குவதாகும்.

தத்துவஞானி அரிஸ்டோட்டில், “மகிழ்ச்சி என்பது ஒரு செயல்பாடு, ஒரு மனநிலை அல்ல” என்று கூறினார். இந்த வரிகள் நேர்மறை சிந்தனையின் மையக் கருத்தை உணர்த்துகின்றன. அதாவது, நேர்மறை சிந்தனை என்பது தானாக வருவது அல்ல. அது ஒரு பயிற்சியாகும். நமது எண்ணங்களை நாமே தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் உள்ளது. மனதின் நேர்மறையான தன்மையே நமது செயல்களுக்கு வெற்றியைத் தரும். நேர்மறை சிந்தனை, நம்முடைய ஆன்மாவின் தூய்மையை வெளிப்படுத்துகிறது.

நமது மூளை நேர்மறை எண்ணங்களுக்கு ஏற்றவாறு கட்டமைக்கப்பட்டுள்ளது. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம். நேர்மறை சிந்தனை என்பது மனதளவில் மகிழ்ச்சியாகவும், நம்பிக்கையுடனும் இருப்பதற்கான ஒரு நிலை மட்டுமல்ல, இது நமது உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்தும் பல விஞ்ஞான ரீதியான விளக்கங்களைக் கொண்டுள்ளது.

மூளையின் செயல்பாடு மற்றும் நரம்பு மண்டலத்தின் செயற்பாடு – நேர்மறையாக சிந்திக்கும் போது மூளையில் உள்ள நரம்பு மண்டலத்தில் சில மாற்றங்கள் ஏற்படுகின்றன. டோபமைன், செரோடோனின் மற்றும் ஆக்சிடோசின் போன்ற “மகிழ்ச்சி ஹார்மோன்கள்” அதிக அளவில் சுரக்கப்படுகின்றன.

இந்த ஹார்மோன்கள் மன அழுத்தத்தைக் குறைத்து, மனநிலையை மேம்படுத்தி, வலி உணர்வைக் குறைத்து, சமூகத் தொடர்புகளை வலுப்படுத்துகின்றன. நேர்மறை சிந்தனை மூளையின் முன்முனைப் பகுதி (prefron tal cortex) மற்றும் மூளையின் உணர்ச்சிப் பகுதியை (amygdala) இணைக்கும் பாதைகளை வலுப்படுத்துகிறது. இதனால் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் திறன் அதிகரிக்கிறது.

நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது (Immune System) மன அழுத்தத்தால் சுரக்கும் கார்டிசோல் போன்ற ஹார்மோன்கள், நோய் எதிர்ப்பு சக்தியைக் குறைத்து, தொற்று நோய்கள் மற்றும் அழற்சிக்கு (inflammation) வழிவகுக்கும்.

நேர்மறையாக சிந்திக்கும்போது, மன அழுத்தம் குறைகிறது. இதனால் கார்டிசோல் அளவும் குறைந்து, நோய் எதிர்ப்பு அமைப்பு வலுவடைகிறது. இது உடலை நோய்களிலிருந்து பாதுகாத்து விரைவாக குணமடைய உதவுகிறது.

உடல் நலன் மற்றும் ஆயுள் அதிகரிக்கிறது. – நேர்மறை சிந்தனை கொண்டவர்கள் இதய நோய்கள், பக்கவாதம், மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்களால் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் குறைவு. மேலும் அவர்கள் ஆரோக்கியமான உணவுப் பழக்கம், உடற்பயிற்சி போன்ற நல்ல வாழ்க்கை முறைகளைப் பின்பற்ற அதிக ஆர்வம் காட்டுகின்றனர். இது அவர்களுடைய ஆயுளை அதிகரிப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.

நேர்மறை சிந்தனையானது பிரபஞ்ச மற்றும் ஆன்மீக ரீதியிலான ஒரு புரிதலையும் கொண்டுள்ளது.

நமது எண்ணங்கள் வெறுமனே மூளையின் செயல்பாடுகள் மட்டும் அல்ல. அவை ஒரு குறிப்பிட்ட அதிர்வு அல்லது ஆற்றலைக் கொண்டுள்ளன. இந்த ஆற்றல் பிரபஞ்சத்துடன் தொடர்பு கொண்டு நம் வாழ்க்கையின் நிகழ்வுகளை உருவாக்குவதாக நம்பப்படுகிறது.

இப்பிரபஞ்சத்தின் புவியின் ஈர்ப்பு விதியின் படி நமது எண் ணங்களுக்கும் உணர்வுகளுக்கும் ஒரு சக்தியுண்டு. அதனாலேயே நமது அதிக நம் பிக்கைகள் நிஜமாகின்றன.

ஒவ்வொரு எண்ணத்துக்கும் ஒரு குறிப்பிட்ட அதிர்வு உள்ளது. நேர்மறையான எண்ணங்கள் (மகிழ்ச்சி, நன்றி, அன்பு) உயர் அதிர்வுகளை உருவாக்குகின்றன. அதே சமயம் எதிர்மறை எண்ணங்கள் (கோபம், பயம், கவலை) குறைந்த அதிர்வுகளை உருவாக்குகின்றன. நாம் அனுப்பும் இந்த ஆற்றல் அதிர்வுகள் பிரபஞ்சத்துடன் தொடர்பு கொள்கின்றன. ஒரு நபர் நேர்மறையான எண்ணங்களை நிலையாக அனுப்பும்போது, பிரபஞ்சம் அதே போன்ற நேர்மறையான சூழ்நிலைகள், வாய்ப்புகள் மற்றும் நபர்களை அவரின் வாழ்க்கைக்குள் ஈர்க்கிறது.

ஒரு நபர் தனது எண்ணங் களின் மூலம் தனது வாழ்க்கையை உருவாக் குகிறார். நீங்கள் ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைய வேண் டும் என்று நேர்மறையாக சிந்திக்கும்போது, நீங்கள் அந்த இலக்குக்கான ஆற்றல் அதிர்வை வெளியிடுகிறீர்கள். இது பிரபஞ்சத்தில் உள்ள ஆற்றலை இயக்கி, அந்த இலக்கை அடைவதற்கான வழிகளை உருவாக்குகிறது.

ஆன்மீக மரபுகளில், மனம் என்பது ஒரு சக்

தொடர்ச்சி▼

# சர்வதேச நேர்மறை சிந்தனை தினம் இன்று!

தொடர்ச்சி▲

திவாய்ந்த ஆக்கபூர்வமான கருவியாகக் கருதப்படுகிறது.

நேர்மறை சிந்தனை என்பது இந்தக் கருவியை சரியான வழியில் பயன்படுத்துவதாகும். அதாவது, மனம் தூய்மையாகவும் , நேர்மறையாகவும் இருந்தால், அது நாம் செய்யும் அனைத்து செயல்களையும் வெற்றிகரமாக்கும்.

ஆன்மீகக் கண்ணோட்டத்தில், வெளி உலக நிகழ்வுகள் நம் உள்மன நிலையின் பிரதிபலிப்புகளாகும் . நீங்கள் உங்கள் மனதை அமைதியாகவும், நேர்மறையாகவும் வைத்துக்கொண் டால் உங்கள் வாழ்க்கையிலும் அமைதியும், நேர்மறையான நிகழ்வுகளும் உண்டாகும். இந்த உள் அமைதியைக் கண்டறிவதே ஆன்மீகப் பயணத்தின் ஒரு முக்கிய நோக்கம்.

நல்ல எண்ணங்கள், நல்ல செயல்களுக்கு வழி வகுக்கும். இது நல்ல விளைவுகளை உருவாக்கும். நல்லதைச் செய்தால் நல்லதே நடக்கும்.

“முயற்சி திருவினையாக்கும்” என்ற தொடர் நேர்மறை சிந்தனைக்கும் வெற்றிக்கும் உள்ள தொடர்பை விளககுகிறது. நேர்மறை சிந்தனை என்பது வெறுமனே எதிர்பார்ப்பது அல்ல. மாறாக, நம்பிக்கையுடன் செயல்படுவது. ஒரு மனிதன் தன்னால் வெற்றி பெற முடியும் என்று நம்பும் போது அந்த நம்பிக்கை அவனது செயல்களுக்கு புதிய உத்வேகத்தைக் கொடுக்கிறது. தோல்வி வரும்போது தோல்வி வெற்றியின் முதல்படி என்று நமது முன்னோர்கள் சொன்னது போல, நேர்மறையான அணுகுமுறை தோல்வியிலிருந்து பாடம் கற்றுக் கொண்டு மீண்டும் முயற்சி செய்ய உதவுகிறது.

ஒருவர் தனது தனிபட்ட நேர்மறை சிந்தனையை வளர்க்க சுயப் பகுப்பாய்வு புத்தகத்தை (journal book) எழுதலாம். ஒவ்வொரு நாளும் நீங்கள் நன் றியுள்ளவர்களாக இருக்கும் விஷயங்களை எழுதுங்கள்.

நன்றியுணர்வு மனதை தூய்மைப்படுத்தும். “தன்னம்பிக்கை இழந்தவன் தன்னையே இழந்தவன் ” என்ற தத்துவத்தை உணர்ந்து, ஒவ்வொரு நாளும் உங்களை நீங்களே ஊக்கப்படுத்துங்கள்.

இன்று உலகளவில் நாளுக்கு நாள் புள்ளி விவரப் பட்டியல்களில் அதிகரித்துக் கொண்ருக்கும் தற்கொலைச் சம்பவங்களுக்கும் , தான் தோன்றித்தனமாக சில நபர்கள் எடுக்கும் தவறான முடிவுகளுக்குமான ஒரே தீர்வு இந்த நேர்மறை சிந்தனையாகும். சர்வதேச நேர்மறை சிந்தனை தினம் என்பது ஒரு நாளில் மட்டும் நேர்மறையாக சிந்திப்பது அல்ல. நமது பேச்சிலும் , எண்ணத்திலும், செயலிலும் நேர்மறையை விதைப்போம். இது ஒரு தனிநபரின் வாழ்க்கையில் மட்டுமல்ல ஒட்டு மொத்த சமூகத்தின் வளர்ச்சிக்கும் அமைதிக்கும் அவசியமாகும்.

**மு.நிமியா.**
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.





# சந்நிதியான் ஆச்சிரமத்தின் வாராந்த தெய்வீக அரங்கும், உதவித் திட்டமும்

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் வாராந்த நிகழ்வில் நேற்று வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையைச் சேர்ந்த கந்தசாமி கபிநாத்தின் பாடல்கள் இடம்பெற்றன.

ஹார்மோனியம் – இசைக்கலைமணி நடேசு செல்வச்சந்திரன், மிருதங்கம் – இசைக்கலைமணி வரதராஜசர்மா ரமணசர்மா கெஞ்சிரா – இ.தனுராஜ், முகர்சிங் – ர.கானாமிர்தசர்மா ஆகிய அணிசெய் கலைஞர்களுடன் இடம்பெற்றது.

உதவித் திட்டங்களாக, கோப்பாய் பிரதேச செயலகத்தின் கோரிக்கைக்கு அமைவாக, முதியோர்களின் ஆன்மீக யாத்திரைக்காக குறிப்பிட்ட தொகை நிதியாக 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

அல்வாய் கிழக்கு, அத்தாய் பிரதேசத்தை சேர்ந்த பார்வை குறைந்த குடும்ப தலைவரின் கோரிக்கைக்கு அமை வாக மூக்கு கண்ணாடி வழங்கப்பட்டது.









# சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் மக்கள் நலன் கருதி துப்புரவுப் பணி

சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்கு வரும் பொதுமக்களின் நலன் கருதி பிரதேச வளாகத்தில் காணப்பட்ட பயன்தரும் மரங்களும் பூமரங்களும் இன்று (13) வாகன உதவியுடன் அலுவலர்களால் துப்பரவு செய்யப்பட்டது.

இடவசதி குறைந்த வளாகத்தில் உயர் அலுவலர்களின் வாகனங்கள் மட்டும் நிறுத்தப்பட்டு வந்தது.

இதனால் பொதுமக்கள் கட்டடத்துக்குள் நுழைவதற்கு சிரமங்களை எதிர்நோக்கினர்.

போதிய இடவசதியின்மையால் அலுவலர்கள் வருகை தரும் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை வீதியோரத்தில் நிறுத்தி வந்தனர்.

அலுவலகத்துக்கு வரும் பொதுமக்கள் தமது வாகனங்களை நிறுத்த சிரமங்களை எதிர்நோக்கினர்.

இந்த நிலையில் வளாகத்தில் காணப்பட்ட பூ மரங்களும் பயன்தரும் மரங்களும் அகற்றப்பட்டன. புதிய பிரதேச செயலர் எவ். சீ.சத்தியஜோதி தலைமையில் அலுவலர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டனர். இந்த இடத்தைப் பொது மக்கள் பாவனைக்கு வழங்கவுள்ளனர் என்று பிரதேச செயலாளர் தெரிவித்தார்.



# தேவைப்பாடுடைய மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கி வைக்கப்பட்டன



(த.சுபேசன்)

சாவகச்சேரி – சக்தியம்மன் பாடசாலையில் கல்வி கற்கும் தேவைப்பாடுடைய மாணவர்களுக்கு சுன்னாகம் பாரம்பரிய றோட்டரிக் கழகத்தால் பாதணிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

தென்மராட்சி, கோவிற்குடியிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக மேற்படி உதவித் திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வில் பாடசாலை அதிபர், சுன்னாகம் பாரம்பரிய றோட்டரிக் கழக பிரதிநிதி, கோவில்குடியிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், பாடசாலையின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# மன்னார் மாவட்டம் கடலோரப் பகுதியாக இருப்பதால் போதைப் பொருளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது!

## அரச அதிபர் கனகேஸ்வரன் தெரிவிப்பு

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டம் கரையோரப் பகுதியாக காணப்படுவதால் போதைப் பொருள்களால் பாதிப்புகளுக்கு உள்ளாகும் ஒரு மாவட்டமாக திகழ்கின்றது என்று மன்னார் மாவட்டச் செயலாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் உயிலங்குளம் 542 ஆவது காலாட்படை பிரிவின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கான போதைப் பொருள் விழிப்புணர்வு கருத்தரங்கு முருங்கன் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றபோது மன்னார் மாவட்டச் செயலாளர் க. கனகேஸ்வரன் உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாடளாவிய ரீதியில் போதைப் பொருள் பாவனை மற்றும் போதைப்பொருள் கடத்தல் ஒரு அபாயகரமான நிலையை எட்டியுள்ளது.

அண்மைக் காலங்களில் கஞ்சா மற்றும் போதைப் பொருள்கள் பாதுகாப்பு படைகளால் அதிகளவு கைப்பற்றுகின்ற



நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

அத்துடன் இதனால் மரணங்களும் இடம்பெற்று வருவதையும் நாம் காணக் கூடியதாக இருக்கின்றது. அத்துடன் போதைப் பொருள்கள் பாவனையாளர்களும் அதிகரித்து வருகின்ற நிலைமையும் காணப்படுகின்றது.

மன்னாரைப் பொறுத்தமட்டில் மன்னார் ஒரு கரையோரப் பகுதியாக இருப்பதன் காரணமாக இதனால் மன்னார் பகுதி போதைப் பொருள்களால் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகும் ஒரு மாவட்டமாகவும் காணப்படுகின்றது.

இதன் காரணமாக மன்னார் மாவட்ட 54 ஆவது படை பிரிவினர் புனர்வாழ்வு திணைக்களத்துடன் இணைந்து பாடசாலைத் தோறும் இந்த போதைப் பொருள்களை கட்டுப்படுத்தும் நோக்கில் விழிப்புணர்வை மாணவர்கள் மத்தியில் கொண்டு வருவது வரவேற்கப்பட வேண்டியது ஒன்றாகும்.

பாடசாலைகளில் முதல் கட்டமாக தேசிய ஔடதங்கள் அதிகார சபையுடன் இணைந்து இந்த பணியினை முன்னெடுத்துள்ளனர்.

உயர்தர பாடசாலை மாணவர்கள் கற்கும் பாடசாலைகளில் இந்த நிகழ்வுகளை முன்னெடுத்துச் செல்ல இருக்கின்றனர். மாணவர்கள் மத்தியில் நாம் இவற்றை முன்னெடுத்துச் செல்வதன் மூலம் போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்த முடியும் என்ற நம்பிக்கையுடன் இதனை ஏற்பாடு செய்த பாதுகாப்புப் படையினருக்கு நான் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.– என்றார்.









# முதல் பிரச்சாரத்தை ஆரம்பித்தார் விஜய் திருச்சியில் தொண்டர்கள் வெள்ளத்தில்

தமிழக வெற்றிக் கழக தலைவர் மற்றும் நடிகர் விஜய், 2026 சட்டமன்றத் தேர்தலுக்கான மக்கள் சந்திப்பு பயணத்தை திருச்சியில் இன்று ஆரம்பித்துள்ளார்.

'உங்க விஜய் நா வரேன்' என்ற தலைப்பில் நடைபெறும் இந்த சுற்றுப்பயணம், மாநிலம் முழுவதும் இன்று முதல் டிசம்பர் வரை நீடிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தனி விமானத்தில் திருச்சி விமான நிலையத்தில் வந்தடைந்த விஜயை, ஆயிரக்கணக்கான தொண்டர்கள் வரவேற்றுள்ளனர்.

த.வெ.க தலைவர் விஜய்யை காண வந்த தொண்டர்கள் அவரது பிரச்சார பஸ்ஸைபின் தொடர்ந்து சென்றனர்.

மேலும் தொண்டர்கள் சூழ்ந்த காரணத்தினால் பிரச்சார பஸ் செல்வதில் சிரமம் ஏற்பட்டது.











# விஜயலட்சுமியின் பாலியல் புகார் விவகாரம்; சீமானுக்கு கெடு விதித்தது உச்ச நீதிமன்றம்



தன்னை திருமணம் செய்து கொள்வதாகக் கூறி பாலியல் ரீதியாக ஏமாற்றிவிட்டார் என நடிகரும், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளருமான சீமான் மீது நடிகை விஜயலட்சுமி கடந்த 2011 ஆம் ஆண்டு வளசரவாக்கம் பொலிஸ் நிலையத்தில் பாலியல் புகார் அளித்தார்.

அதன்பேரில் பொலிஸார் சீமான் மீது பாலியல் துன்புறுத்தல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் கடந்த 2011 ஆம் ஆண்டு வழக்குப் பதிவு செய்திருந்தனர். இந்த வழக்கை ரத்து செய்யக்கோரி சீமான் தாக்கல் செய்திருந்த மனுவை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற தனி நீதிபதி, கடந்த பெப்பரவரி 17 அன்று சீமான் மீதான பாலியல் வழக்கை ரத்து செய்ய முடியாது, என மறுப்பு தெரிவித்தார்.

சென்னை உயர் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு தடைகோரி சீமான் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந் தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதி பி.வி.நாகரத்னா தலைமையிலான அமர்வு, சீமானுக்கு எதிரான பாலியல் வழக்கு விசாரணைக்கும், உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தர வுக்கும் இடைக்கால தடை விதித்து கடந்த மார்ச் மாதம் உத்தரவிட்டிருந்தது.

விஜயலட்சுமிக்கு உரிய இழப்பீடு வழங்குவது தொடர்பாக இருதரப்பிலும் சமரசமாக பேசி முடிவெடுக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு கடந்த ஜூலை மாதம் மீண்டும் விசாரணைக்கு வந்தபோது இருதரப்பிலும் பதிலளிக்க 4 வார காலம் அவகா சம் அளிக்கப்பட்டது.

இந்நிலையில், இந்த வழக்கு உச்ச நீதிமன்ற நீதிபதி கள் அமர்வில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப் போது விஜயலட்சுமி தரப்பில் மூத்த வழக்கறிஞர் ஷாதான் ஃபராஸத் ஆஜராகி, இந்த விவகாரத்தில் சமரசத்துக்கு வாய்ப்பில்லை என்றும், விஜயலட்சுமி குறித்தும் சீமான் ஏற்கெனவே அவதூறாகப் பேசியுள்ளார்.

இதில் மனமுடைந்த அவர் கடந்த 2020ஆம் ஆண்டு தற்கொலைக்கு முயன்றுள்ளார். கடந்த 2007ஆம் ஆண்டு முதல் இருவரும் பரஸ்பர சம்மதத்துடன்தான் பாலியல் உறவில் இருந்துள்ளனர் என வாதிட்டார்.

அதையடுத்து நீதிபதிகள், “இருவரும் என்ன செய்தார்கள் என்பது அவர்களுக்கு மட்டும் தான் தெரியும். தெரியாது எனச்சொல்ல அவர்கள் ஒன்றும் சின்ன குழந்தைகள் அல்ல. இந்த விவகாரத்தில் இருந்து விடுபட்டு இருவரும் சுதந்திர மான, நிம்மதியான வாழ்க்கையை தொடர வேண்டும் என விரும்புகிறோம்.

எதிர்காலத்தில் விஜயலட்சுமிக்கு எந்த தொந்தரவும் கொடுக்க மாட்டேன் என்றும், விஜயலட்சுமி மீதான அவதூறு கருத் துக்களையும், குற்றச்சாட்டுகளையும் வாபஸ் பெற்றுக் கொள் கிறேன் என்றும், இந்த விவகாரத்தில் மன்னிப்பு கோரி சீமான் விளக்க மனு தாக்கல் செய்ய வேண்டும். அப்படி செய்தால் அவர் மீதான பாலியல் வழக்கை ரத்து செய்வது குறித்து யோசிப்போம். தவறும்பட்சத்தில் சீமான் தாக்கல் செய்துள்ள இந்த மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்படும்” எனக் கூறி சீமான் மீதான பாலியல் வழக்கு விசாரணைக்கு விதிக் கப்பட்ட இடைக்காலத் தடையை எதிர்வரும் செப்ரப்பர் 24 வரை நீட்டித்தும், சீமானுக்கு கெடு விதித்தும் உத்தரவிட் டுள்ளனர்.

# மோடி தாயாரின் ஏ.ஐ. காணொலி; காங்கிரஸூக்கு பா.ஜ.க. கண்டனம்



ஏ.ஐ. உதவியுடன் உருவாக்கப்பட்ட காணொலி ஒன்றை பிஹார் காங்கிரஸ் கட்சி இரு தினங்களுக்கு முன் வெளியிட் டிருந்தது. இதில் பிரதமர் மோடியின் கன வில் அவரது மறைந்த தாயார் வந்து, பிரத மர் மோடியின் பிஹார் அரசியல் குறித்து விமர்சனம் செய்வது போல் உள்ளது.

இதுகுறித்துபா.ஜ.க.செய்தித்தொடர்பா ளர் ஷெஜாத் பூனாவாலா சமூக ஊடகப் பதிவில் குறிப்பிடுகையில், பான காணொலி மூலம் அனைத்து வரம் புகளையும் மீறிவிட்டது. இது, அக்கட்சி யின் துஷ்பிரயோகத்தை காட்டுகிறது. பெண்களை அவமானப்படுத்துவது என் பது அக்கட்சியின் அடையாளமாக மாறி விட்டது. நம்முடன் இல்லாதவர் பற்றி காணொலி வெளியிட்டதற்கு காங்கிரஸ் வெட்கப்படவேண்டும்.” என்று குறிப்பிட் டுள்ளார்.

பா.ஜ.க எம்.பி. அனுராக் தாக்குர் கூறு

“அரசியலில் எவ்வளவு கீழ்த்தரமாக செல்ல முடியும் என்பதை ஆர்.ஜே.டி. மற்றும் காங்கிரஸ் காட்டியுள்ளன. இது அருவருப்பானது மற்றும் வெட்கக்கேடா னது. இதனை பிஹார் மக்கள் ஒருபோ தும் மன்னிக்க மாட்டார்கள். வரும் தேர்த லில் அவர்கள் படு தோல்வியை சந்திப் பார்கள்.” என்றார்.

மத்திய அமைச்சர்கள் பியூஷ் கோயல், கிரண் ரிஜிஜு ஆகியோரும் காங்கிரஸ்





# நேபாள நாடாளுமன்றம் கலைப்பு; மார்ச் 5 ஆம் திகதி பொதுத் தேர்தல்

நேபாள நாடாளுமன்றம் நேற்று இரவு கலைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அடுத்த ஆண்டு மார்ச் 5 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேபாளத்தில் 'ஜென் ஸீ' இளைஞர்கள் நடத்திய தீவிர போராட்டங்களால் பிரதமர் கே.பி.சர்மா ஒலி (வயது 73) தலைமையிலான கொம்யூனிஸ்ட் அரசு கவிழ்ந்தது. இதனால் அந்நாட்டில் அரசியல் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

நாட்டின் இடைக்கால பிரதமராக யாரை தேர்வு செய்வது என்பது தொடர்பாக தொடர் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன. நேபாள இராணுவத் தளபதி அஷோக் சிக்டெல், இது தொடர்பாக ஆலோசனைகளை மேற்கொண்டார்.

இதில், நேபாளத்தின் இடைக்கால பிரதமராக நேபாளத்தின் முன்னாள் தலைமை நீதிபதி சுசீலா கார்கி–க்கு போராட்டக்காரர்கள் ஒருமனதமாக ஆதரவு தெரிவித்தனர்.

இந்நிலையில் நேற்று இரவு சுசீலா கார்கி இடைக்கால பிரதமராக பதவியேற்றார். நேபாள ஜனாதிபதி ராம் சந்திர பவுடல் அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

இதன் மூலம் நேபாளத்தின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

பதவியேற்றதும் கார்கி தனது முதல் அமைச்சரவைக் கூட்டத்தை நடத்தினார். இந்த கூட்டத்தில் அடுத்த ஆண்டு மார்ச் 5 அன்று புதிய பொதுத் தேர்தலை நடத்த முடிவு செய்யப்பட்டது.



# உக்ரைனுடனான அமைதி பேச்சுவார்த்தை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ரஷ்ய அறிவிப்பு



உக்ரைனுடனான அமைதிப் பேச்சுவார்த்தை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், அமைதிப் பேச்சுவார்த்தைக்கு ஐரோப்பிய நாடுகள் தடையாக உள்ளதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் குற்றஞ்சாட்டினார்.

உக்ரைன் மீது, கடந்த 2022ஆம் ஆண்டு ரஷ்யாவினால் ஆரம்பிக்கப்பட்ட போர், மூன்றாண்டுகளைக் கடந்துள்ளது. போரை நிறுத்துவதற்கு பல்வேறு நாடுகள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.

இந்தநிலையில், அண்மையில் சீனாவின் நடந்த ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாட்டில் கலந்துகொண்ட ரஷ்ய ஜனாதிபதி புடின் உக்ரைனுடனான போரை, பேச்சுவார்த்தை மூலம் நிறுத்துவதற்கு இன்னும் வாய்ப்பு உள்ளது எனத் தெரிவித்திருந்தார்.

அத்துடன், அவசியம் ஏற்படும் நிலையில் ஆயுதம் மூலமே ரஷ்யா போரை முடிவுக்குக் கொண்டுவரும் என்றும் எச்சரித்திருந்தார்.

உக்ரைன் ஜனாதிபதி செலன்ஸ்கி, விளோடிமிரை ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் சந்தித்துப் பேச தயாராக இருப்பதாகவும், ஆனால் உறுதியான முடிவுகளை தருவதாக இருந்தால் மட்டுமே பேச்சுக்குத் தயார் எனவும் புடின் தெரிவித்திருந்தார்.

எனினும், பேச்சுவார்த்தைக்கான இடமாக மொஸ்கோவை ஏற்க உக்ரைன் ஜனாதிபதி செலன்ஸ்கி மறுத்து விட்டார்.

அத்துடன், ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை விதிக்க அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளை செலன்ஸ்கி வலியுறுத்தினார்.

இந்தநிலையில், ரஷ்யா – உக்ரைன் இடையேயான அமைதிப்பேச்சுவார்த்தை தற்போது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும், இதற்கு ஐரோப்பிய நாடுகளே காரணம் எனவும் ரஷ்ய ஜனாதிபதியின் ஊடகத் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

# ரஷ்யாவில் நில நடுக்கம்; சுனாமி எச்சரிக்கை விடுப்பு



ரஷ்யாவின் கம்சட்கா தீபகற்பத்தின் கிழக்கு கடற்கரையில் இன்று 7.4 மெக்னிடியூட் அளவிலான நில அதிர்வு ஏற்பட்டது.

எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

பெட்ரோபாவ்லோவ்ஸ்க்- கம்சாட்ஸ்கிக்கு கிழக்கே 111.7 கிலோமீட்டர் தொலைவிலும், 39 கிலோ மீற்றர் ஆழத்திலும் கப் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.


ஒரு மீற்றர் வரை அலைகள் எழக்கூடும் என்று பசிபிக் சுனாமி எச்சரிக்கை

பக்கங்கள் 02

கனடா முரசு

சனிக்கிழமை 13/09/2025

## கனேடிய முதியவர் மீது கொலை குற்றச்சாட்டு



அமெரிக்காவில் வலதுசாரி அரசியல் செயற்பாட்டாளர் சார்லி கர்க் படுகொலை செய்யப்பட்ட சம் 02



# ரஷ்ய தூதுவருக்கு அழைப்பாணை; அமைச்சர் அனிதா ஆனந்த் தகவல்

ரஷ்ய ட்ரோன்கள் போலந்துக்குள் அத்துமீறிய விவகாரம் தொடர்பில் ரஷ்ய தூதுவருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதாக கனடா வெளியுறவுத்துறை அமைச்சர் அனிதா ஆனந்த் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய ட்ரோன்கள் போலந்துக்குள் அத்துமீறியதாக போலந்து அறிவித்த சில மணி நேரத்துக்குள், கனடாவுக்கான ரஷ்ய தூதுவருக்கான அழைப்பாணை அனுப்பப்பட்டதாக கனடா வெளியுறவுத் துறை அமைச்சரான அனிதா ஆனந்த் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய் நள்ளிரவு போலந்துக்குள் ரஷ்ய ட்ரோன்கள் ஊடுருவிய விடயம் உலக அரசியலில் பெரும் பரபரப்பை உருவாக்கியுள்ள நிலையில், புதன்கிழமையன்று கனடாவுக்கான ரஷ்ய தூதரான Oleg Stepanov க்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. 02

# பாலியல் குற்றச்சாட்டில் இந்திய மருத்துவரின் மருத்துவ அனுமதியை ரத்து செய்தது கனடா

கனடாவில் இந்திய வம்சாவளி பெண் மருத்துவர் தன்னிடம் சிகிச்சைக்காக வந்த நோயாளிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்தமை நிரூபனமான நிலையில் அவரது மருத்துவ அனுமதி ரத்து செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்யப்பட்டு நீதிமன்றில் விசாரணை நடத்தப்பட்டு வந்தது. இந்த விசாரணையின்போது நோயாளிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்தமையை இந்திய வம்சாவளி பெண் மருத்துவர் ஒப்புக்கொண்டார்.

அதே சமயம், தன் மீதான குற்றச்சாட்டுகளில் பல்வேறு தகவல்கள் மூடி மறைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். அவரது பயிற்சியாளர் ஒருவருடன் உறவு வைத்துக் கொண்டதாகவும், அந்த சமயத்தில் இருவரும் காதலித்து வந்ததாகவும் அவர் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, வழக்கு விசாரணையின்போது நான் இந்திய குடும்பத்தில் மிகுந்த கலாசார மதிப்புகளுடன் வளர்க்கப்பட்டவள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள், வைத்தியராக பணிபுரிந்த இந்த பெண், தன்னிடம் சிகிச்சைக்கு வந்த



நோயாளி ஒருவருடன் உறவு வைத்துக் கொண்டதும், மற்ற இருவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்ததும் விசாரணையில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக கூறி, அவரது மருத்துவ அனுமதியை ரத்து செய்து உத்தரவிட்டனர்.

# நியுமோனியா பாதிப்பு வெகுவாக அதிகரிப்பு




கனடாவில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நியுமோனியாவுக்காக அவசர சிகிச்சை பிரிவுகளுக்குச் சென்ற நோயாளிகள் எண்ணிக்கை இரட்டிப்பாக உயர்வடைந்துள்ளது என கனடிய சுகாதார தகவல் மையம் தெரிவித்துள்ளது.

இதில் அதிகம் பாதிக்கப்பட்டது 5 முதல் 19 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் என ஆய்வு கூறுகிறது.

கோவிட் தொற்றுக்குப் பின்னர் நியுமோனியாவுக்கான அவசர சிகிச்சை வருகைகள் இவ்வளவு அதிகரித்தது இதுவே முதல் முறை என தெரிவிக்கப்படுகின்றது.

2023-24 காலப் பகுதியில் மக்களை தாக்கிய முதல் பத்து நோய்களில் ஒன்றாக இடம்பிடித்திருக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் 2024-25ல் வயிற்று வலி, தொண்டை, மார்பு வலிக்கு அடுத்ததாக நியுமோனியா மூன்றாவது இடத்திற்கு உயர்ந்துள்ளது. மிகவும் லெசான அறிகுறிகளுடன் நியுமோனியா காய்ச்சல் நோயாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது பொதுவாக இருமல், காய்ச்சல், சோர்வு போன்ற லேசான அறிகுறிகளைக் கொண்டிருக்கும்.

பலர் தானாகவே குணமடைகிறார்கள். ஆனால் சிலருக்கு நரம்பியல் பிரச்சினைகள், தோல் பொடுகுகள் போன்ற தீவிர விளைவுகளும் ஏற்படலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குழந்தைகளுக்கு நீடித்த இருமல், காய்ச்சல், சோர்வு இருந்தால் உடனடியாக மருத்துவரை அணுகுமாறு நிபுணர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

## கனேடிய முதியவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பவத்துடன் தொடர்புடையதாக, கனடியர் ஒருவர் குற்றமற்றவர் என தெரியவந்துள்ளது.

டொராண்டோவில் வசிக்கும் 77 வயது ஓய்வுபெற்ற வங்கி அதிகாரி மைக்கேல் மல்லின்சன், புதன்கிழமை மதியம் தூக்கத்திலிருந்து எழுந்தபோது, அவரது மகளிடமிருந்து பதற்றமான அழைப்பு வந்துள்ளது.

உங்கள் சமூக வலைதளக் கணக்குகளை உடனே நீக்குங்கள், உங்கள் பெயரும் புகைப்படமும் கெர்க் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புபடுத்தப்பட்டு இணையத்தில் பரவி வருகிறது என்று மகள் எச்சரித்துள்ளார்.

மல்லின்சன் பின்னர் கூகுளில் தேடிப் பார்த்ததில், அவரது புகைப்படம் பொய்யான குற்றச்சாட்டுகளுடன் எக்ஸ் தளத்தில் பகிரப்பட்டிருப்பது தெரியவந்தது.

ஆனால் அதிகாரப்பூர்வ தகவல்களில் அவரது புகைப்படம் சம்பந்தப்பட்டவரின் உருவத்துடன் பொருந்தவில்லை என்றும், அவர் கைது செய்யப்பட்டவரல்ல என்றும் தெளிவுபடுத்தப்பட்டது.

நான் ஒரு சாதாரண மனிதன். அதே நேரத்தில் சமூக வலைதளங்களில் எனது பெயர் குற்றச்சாட்டுடன் இணைக்கப்பட்டிருப்பது அச்சத்தை ஏற்படுத்தியது எனுவும் சிலர் என்னை திட்டியும் மிரட்டியும் செய்தார்கள் என மல்லின்சன் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்தால் அவர் முகநூல், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக வலைதளக் கணக்குகளை நீக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த சம்பவம் தொடர்பில் அமெரிக்க அதிகாரிகள் இரண்டு பேரை கைது செய்ததாக தெரிவித்துள்ளனர்.

ஆனால் அவர்கள் கெர்க் படுகொலையுடன் தொடர்புடையவர்கள் அல்ல. உண்மையான குற்றவாளி இன்னும் பிடியிலில்லை. துப்பாக்கிச் சூடு நடந்த இடத்திலிருந்து ஓடிப்போன ஒருவரின் புகைப்படம், காணொலியை அதிகாரிகள் வெளியிட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தினால் தாம் தொடர்ந்தும் அச்சமடைந்திருப்பதாக மல்லின்சன் தெரிவித்துள்ளார்.

## ரஷ்ய தூதுவருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ரஷ்ய ட்ரோன்கள் போலந்துக்குள் அத்துமீறிய விவகாரம் தொடர்பில் ரஷ்ய தூதுவருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதாக கனடா வெளியுறவுத்துறை அமைச்சர் அனிதா ஆனந்த் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய ட்ரோன்கள் போலந்துக்குள் அத்துமீறியதாக போலந்து அறிவித்த சில மணி நேரத்துக்குள், கனடாவுக்கான ரஷ்ய தூதுவருக்கான அழைப்பாணை அனுப்பப்பட்டதாக கனடா வெளியுறவுத்துறை அமைச்சரான அனிதா ஆனந்த் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய் நள்ளிரவு போலந்துக்குள் ரஷ்ய ட்ரோன்கள் ஊடுருவிய விடயம் உலக அரசியலில் பெரும் பரபரப்பை உருவாக்கியுள்ள நிலையில், புதன்கிழமையன்று கனடாவுக்கான ரஷ்ய தூதரான Oleg Stepanovக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

போலந்து வான்வெளிக்குள் ரஷ்ய ட்ரோன்கள் ஊடுருவிய விவகாரம் குறித்து அதிகாரப்பூர்வமாக கண்டனம் தெரிவிக்கப்பட்டதாகவும் அமைச்சர் அனிதா ஆனந்த் தெரிவித்துள்ளார்.

போலந்து வான்வெளியில் ஊடுருவியதன்மூலம் நேட்டோ வான்வெளிக்குள் ஊடுருவிய விடயம் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதல்ல என்றும் அனிதா ஆனந்த் தெரிவித்துள்ளார்.

அது பொறுப்பற்ற செயல் என்றும் கூறியுள்ள கனடா வெளிவிவகார அலுவலகம், அது நேட்டோவுடன் மோதலை உருவாக்கும் அபாயத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

மேலும், கனடா உக்ரைனுக்கு அளித்துவரும் ஆதரவை ரஷ்யாவால் மாற்றமுடியாது என்றும் கனடா வெளிவிவகார அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கிறது.

இந்நிலையில், ஏற்கனவே ஜேர்மனியும் போலந்து மீதான ட்ரோன் தாக்குதல் தொடர்பில் ஜேர்மனிக்கான ரஷ்ய தூதுவருக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளது குறிப்பிடத்தக்கது.